OS: 68/2018

Date:17.08.2023

பெயர் : கலா

**பிரதிவாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

<u>**குறுக்கு விசாரணை:-**</u> வாதிகள் தரப்பில்

நானும், 2 ம் பிரதிவாதியும் மேட்டூர் நீதிமன்றத்தில் இதே வழக்கில் ஒரே வழக்கறிஞரை வைத்திருந்தோம் என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதி 2 ம் பிரதிவாதியின் மகன் என்றால் சரிதான். நாங்கள் மூவருமே ஒரே வழக்கறிஞரை தான் வைத்திருந்தோம் என்றால் சரிதான். எனக்கு பதிலுரை என்ன போட்டுள்ளார்கள் என தெரியுமா என்றால் தெரியாது. தாவாவில் 2, 3 ம் பிரதிவாதிகள் இவ்வழக்கை நடத்திவருகிறார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் எனக்காக மட்டுமே தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

வாதி இவ்வழக்கில் என்ன கேட்டுள்ளார் என்றால் தாவா சொத்தானது அவர்கள் கிரயம் வாங்கிய சொத்தாக சொல்லியுள்ளார்கள். தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் தாவா சொத்தினை பொருத்து கிரய ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்திகொள்ளும்போது மூல பத்திரம் பார்த்தேனா என்றால் இல்லை. தாவா சொத்துக்கு வில்லங்கம் இருக்கிறதா என பார்த்தேனா என்றால் இல்லை. 13.04.2010 தேதியில் சிவபிரகாசம் என்பவர் சேலத்தை சேர்ந்த சித்தேஷ்வரன் குமாரர் ராமமூர்த்தி என்பவருக்கு ஒரு பவர் பத்திரம் MS பிரகாசம் எழுதிகொடுத்துள்ளார் என்று சொன்னால் அது தற்போது தான் எனக்கு தெரியும். நான் ஓமலூரில் குடியிருந்தேனா என்றால் 3 ஆண்டுகள் மட்டும் ஓமலூரில் இருந்தேன் அதற்கு பின்பு கண்ணங்குறிச்சி சென்றுவிட்டேன். பவர் பத்திரம் எழுதிகொடுத்த MS பிரகாசத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை.

மேற்படி பொது அதிகாரம் பெற்றுள்ள ராமமூர்த்தி ஒரு சக்திவேல் என்பவருக்கு ஒரு கிரய பத்திரம் 14.04.2010 தேதியில் எழுதிகொடுத்துள்ளார் அந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தற்போது தான் தெரியும். நான் வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கை பொருத்து தற்போதுதான் தெரிந்துகொண்டேன். வாதிகள் இருவரும் தாவா சொத்தினை கூட்டாக 20.07.2011 தேதியில் சக்திவேல் என்பவரிடம் இருந்து கிரயம்

பெற்றுள்ளார்கள் என்று சொன்னால் எனக்கு அவர்கள் கிரயம் வாங்கியது தெரியாது. வருவாய் துறையில் சக்திவேல் பெயருக்கு உட்பிரிவு செய்யப்பட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளது அந்த விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தினுடைய பிளாட்டின் நான்கு பக்க செக்குபந்திகள் தெரியுமா என்றால் பத்திரம் பார்த்தால் தான் எனக்கு தெரியும். எனக்கு எந்த பத்திரத்தை பார்த்து சொல்லமுடியும் என்றால் நீதிமன்றத்திலிருந்து எழுதிகொடுத்த பத்திரத்தை பார்த்துதான் சொல்லமுடியும்.

தாவா சொத்தினுடைய நீள, அகலம் எவ்வளவு என தெரியுமா என்றால் எனக்கு சரியான அளவுகள் தெரியாது. தற்போது தாவா இடமானது காலியிடமாகத்தான் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து அல்லாமல் இன்னும் எத்தனை பிளாட்டுகள் 2 ம் பிரதிவாதியிடம் இருந்து வாங்கினேன் என்றால் மேலும் 2 பிளாட்டுகள் வாங்கியுள்ளேன். மற்ற 2 நான் வாங்கிய பிளாட்டுகளை பொருத்து நீதிமன்றத்திலிருந்து அழைப்பானை வந்தது என்றால் சரியல்ல அது எந்த பிளாட்டுக்கு வந்தது என்று எனக்கு தெரியாது. நான் வாங்கிய 3 பிளாட்டுகளும் பிரச்சனை உள்ளது என்றால் சரியல்ல, நான் வாங்கியபோது பிரச்சனைகள் உள்ளது எனக்கு தெரியாது. 2, 3 பிரதிவாதிகள் நீதிமன்றத்திற்கு ஆஜராகவில்லை என்பதால் அவர்களுக்கு எதிராக ஒரு தலைபட்ச தீர்ப்பு ஏற்பட்டு அதன் அடிப்படையில் கிரய ஆவணம் எழுதிகொடுக்கப்பட்டது என்றால் அவர்கள் நீதிமன்றத்திற்கு வந்தார்களா இல்லையா என்று எனக்கு தெரியாது.

**(குறுக்குவிசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.)**

ஒப்பம்/-DW1
ஒப்பம்/-சார்பு நீதிபதி, ஓமலூர்.